பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 08 2024 **SUNDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, மூன்று நாடுகள் அரசுமுறை பயணத்தின் முதற்கட்டமாக இன்று **Fiji** புறப்பட்டுச் செல்கிறார்.

2. டிஜிட்டல் இந்தியா இயக்கத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் ஆளுநர்கள் தகவல் தொழில்நுட்பத்தை கூடுதலாக பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள வயநாட்டில் மீட்புப் பணிகள் ஆறாவது நாளாக இன்றும் நீடிக்கிறது.

4. பங்களாதேஷில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இடஒதுக்கீடு சீர்திருத்த இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அந்நாட்டு அரசு விடுத்த கோரிக்கையை நிராகரித்தனர்

5. பாரிஸ் ஒலிம்பிக் பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் இன்று டென்மார்க்கின் **Viktor Axelsen-**ஐ எதிர்கொள்கிறார்.

>>>><<<<

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று **Fiji** புறப்பட்டுச் செல்கிறார்.

அந்நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து குடியரசுத் தலைவர் விவாதிக்கவுள்ளார்.

இதனை தொடர்ந்து அந்நாட்டு நாடாளுமன்றத்திலும் திருமதி. திரௌபதி முர்மு உரையாற்றுகிறார்.

பின்னர், நியூஸிலாந்து செல்லும் குடியரசுத்தலைவர், வெலிங்டனில் சர்வதேச கல்வி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

நியூஸிலாந்து பயணத்தை முடித்துக் கொண்டு, **Timor Leste** செல்லும் திருமதி. திரௌபதி முர்மு அந்நாட்டு தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

இந்த மூன்று நாடுகள் பயணத்தின் போது, அங்குள்ள இந்திய வம்சாவளியினருடனும் அவர் கலந்துரையாடவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

டிஜிட்டல் இந்தியா இயக்கத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் ஆளுநர்கள் தகவல் தொழில்நுட்பத்தை கூடுதலாக பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தலைமையில் இரண்டு நாட்களாக நடைபெற்ற ஆளுநர்கள் மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் நேற்று கலந்து கொண்டு அவர் பேசினார்.

சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்யும் வகையில் ஆளுநர் மாளிகை செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இதற்கு தேவையான பயிற்சிகளை ஆளுநர் மாளிகையில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

கல்வி நிறுவனங்களில் போதைப்பொருள் புழக்கம் இல்லாததை ஆளுநர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் பிரதமர் கூறினார்.

இயற்கை வேளாண்மைக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இந்த இரண்டு நாள் மாநாட்டில் ஆளுநர்கள் தெரிவித்த பரிந்துரைகள் மற்றும் அறிக்கைகள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

>>>><<<<

வேளாண் துறையில் இந்தியா பல்வேறு சாதனைகளை படைத்துள்ளதாக சர்வதேச வேளாண் பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச வேளாண் பொருளாதார நிபுணர்கள் பங்கேற்றுள்ள ஆறுநாள் மாநாட்டில் உரையாற்றிய பங்களாதேஷைச் சேர்ந்த திருமதி. **Hasmin,** வேளாண் துறையில் இந்தியா படைத்துள்ள சாதனைகளை பட்டியலிட்டார்.

வேளாண் கல்வி மற்றும் கட்டமைப்பு வசதி, அத்துறையின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுவதாக திருமதி. **Hasmin** தெரிவித்தார்.

கென்யாவின் சார்பில் பங்கேற்ற பிரதிநிதி திரு. **Dodo Makwal,** வேளாண் ஆராய்ச்சி பணிகளில் இந்தியாவின் பங்கு மகத்தானது என்று குறிப்பிட்டார்.

பல்வேறு நாடுகளுக்கு இந்தியா உணவுப் பொருட்களை விநியோகம் செய்து வருவதையும் திரு. **Dodo Makwal** சுட்டிக்காட்டினார்.

ஜப்பான் சார்பில் பங்கேற்ற பிரதிநிதி திருமதி. **Sobren** வேளாண் துறையில் பாரம்பரியத்தையும், நவீன தொழில்நுட்பத்தையும் இந்தியா கொண்டிருப்பது சிறப்பு அம்சமாகும் என்று கூறினார்.

இந்த மாநாட்டில் 75 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

**>>>><<<<**

கேரளாவில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள வயநாட்டில் மீட்புப் பணிகள் ஆறாவது நாளாக இன்றும் நீடிக்கிறது.

பாதுகாப்புப் படையினர் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் பணியினர் இப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண உதவிகளையும் இவர்கள் வழங்கி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்கும் வகையில் ட்ரோன்களும் பயன்படுத்தப்படுவதாக அவர் மேலும் கூறுகிறார்.

மீட்புப் பணிகளில் தொடர்பில்லாதவர்கள் பாதிக்கப்பட்ட பகுதியை பார்வையிட செல்ல வேண்டாம் என்று அம்மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

உயிரிழந்தோரின் உடல்கள் உரிய பிரேத பரிசோதனைக்குப் பின்னர், உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 308-ஆக அதிகரித்துள்ளது என்று கேரள அரசு தெரிவித்துள்ளது.

>>>><<<<

தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி, 12 நாள் அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா மற்றும் தென்கொரியா புறப்பட்டுச் சென்றார்.

தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் முதலமைச்சர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>><<<<

உத்தரபிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில், 7 பேர் உயிரிழந்தனர். 25 பேர் காயமடைந்தனர்.

ஆக்ரா – லக்னோ இடையேயான அதிவிரைவு சாலையில் பேருந்தும் காரும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டதாக **Etawah** காவல்துறை கண்காணிப்பாளர் திரு. சஞ்சய்குமார் வர்மா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் 4 பேர் பேருந்திலும், 3 பேர் காரிலும் பயணம் செய்ததாக அவர் கூறினார்.

நள்ளிரவு 12 மணியளவில் இந்த விபத்து நேரிட்டதாகவும், இதுகுறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் திரு. சஞ்சய்குமார் வர்மா தெரிவித்தார்.

>>>><<<<

புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரெங்கசாமியின் பிறந்த நாளை முன்னிட்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரியின் வளர்ச்சிக்காக பல்வேறு தொடர் நடவடிக்கைகளை திரு. ரெங்கசாமி மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் விடுத்துள்ள செய்தியில் சமுதாயப் பணிகளை திரு. ரெங்கசாமி தொடர்ந்து மேற்காள்ள வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

ஆந்திர மாநிலம், விசாகபட்டிணம் ரயில் நிலையத்தில், நின்று கொண்டிருந்த ரயில் ஒன்றில் தீ பிடித்தது.

இதனையடுத்து, தீயணைப்புப் படை வீரர்கள் தீயை உடனடியாக அணைத்தனர்.

இந்த ரயிலில் இருந்த பயணிகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

மத்தியபிரதேசத்தில் சுவர் சரிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில், 9 குழந்தைகள் உயிரிழந்தனர்.

**Sagar** மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் இந்த விபத்து நேரிட்டதாகவும், இதில் சில குழந்தைகள் காயமடைந்துள்ளதாகவும் அம்மாவட்ட ஆட்சியர் திரு. **Deepak Arya** செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில், இன்று ஆடி அமாவாசையை முன்னிட்டு, பொதுமக்கள் நீர்நிலைகளில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வழிபட்டனர்.

ராமேஸ்வரத்தில் அதிகாலை முதலே பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அக்னி தீர்த்த கடற்கரையில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கார்த்திகேயன் 27 செகண்ட்ஸ்)

**>>>><<<<**

தமிழகத்தில் முழு மதுவிலக்கை மாநில அரசு செயல்படுத்த வேண்டும் என்று மதிமுக வலியுறுத்தியுள்ளது.

இன்று சென்னையில் நடைபெற்ற அக்கட்சியின் பொதுக்குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை மாநில அரசு நிறைவேற்ற வேண்டும், சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட 22 தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

**>>>><<<<**

ஜம்மு காஷ்மீரில் பெய்த அதிகனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

**Ganderbal** மாவட்டத்திற்கு உட்பட்ட **Cherwan Kangan** பகுதியில் பெய்த இந்த அதிகனமழை காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

குடியிருப்புகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பல்வேறு பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டதாகவும், இதில் வாகனங்கள் சிக்கியுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

**>>>><<<<**

பங்களாதேஷில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இடஒதுக்கீடு சீர்திருத்த இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் அந்நாட்டு அரசு முன்வைத்த பரிந்துரையை நிராகரித்தனர்.

பேச்சுவார்த்தைக்கு வருமாறு அந்நாட்டு பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனா விடுத்த கோரிக்கையை நிராகரித்த போராட்டக் குழுவினர், அவர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினர்.

>>>><<<<

லெபனானில் வசிக்கும் தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்கள் உடனடியாக வெளியேறுமாறு அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து கேட்டுக் கொண்டுள்ளது.

இஸ்ரேல் - ஹிஸ்புல்லா இடையே சண்டை ஏற்படும் சூழல் உருவாகியுள்ளதால், இருநாடுகளும் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.

லெபனானில் உள்ள அமெரிக்க தூதரகம், அமெரிக்கர்கள் விமானங்களில் முன்பதிவு செய்து உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளது.

இதற்கிடையே, **Beirut**–ல் செயல்படும் தூதரகத்தை ஸ்வீடன் தற்காலிகமாக மூடியுள்ளது.

>>>><<<<

பாரிஸ் ஒலிம்பிக் பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் இன்று டென்மார்க்கின் **Viktor Axelsen**-ஐ எதிர்கொள்கிறார்.

பிற்பகல் மணி 3.30-க்கு இப்போட்டி தொடங்குகிறது.

பிற்பகல் ஒன்றரை மணிக்கு ஹாக்கிப் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

மகளிர் குத்துச்சண்டை போட்டியின் 75 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Lovlina Borgohain** சீனாவின் **Li Qian**–ஐ எதிர்கொள்கிறார்.

பிற்பகல் மணி 3.20-க்கு இப்போட்டி தொடங்குகிறது.

தற்போது நடைபெற்று வரும் ஆடவர் 25 மீட்டர் துப்பாக்கிச் சுடும் பிரிவில் **Anish Bhanwala** மற்றும் **Vijayveer Sidhu** பங்கேற்றுள்ளனர்.

மகளிர் 3 ஆயிரம் மீட்டர் ட்ரிபிள் சேஸ் பிரிவில் **Parul Chaudhary**–யும், நீளம் தாண்டுதல் பிரிவில் **Jeswin Aldrim**–மும் பங்கேற்கின்றனர்.

**>>>><<<<**

இந்தியா – இலங்கை இடையேயான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

கொழும்பில் இப்போட்டி பிற்பகல் மணி 2.30–க்கு தொடங்குகிறது.

**>>>>END<<<<**